**ஹல்தும்முல்ல பிரதேச சபை**

**பதுளை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 30 இலும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 28 இலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 யூன் 30 இல் சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர்த்து ஹல்தும்முல்ல பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வழங்கல் உபகரணத்தின் கொள்வனவால் மீளாய்வாண்டின் கணக்குகளில் ரூபா 334,135 தொகை அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) இரண்டு சேமிப்புக் கணக்குகளின் பெறுமதி ரூபா 35,973 ஆல் கணக்குகளில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) ரூபா 916,499 தொகையான இரண்டு சேமிப்பு கணக்குகளின் பெறுமதி நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகளின் பெறுமதி ரூபா 5,638,432 ஆல் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது.

(உ) அறவிட வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் ரூபா 1,650,583 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) ரூபா 287,000 பெறுமதியின் புறனஹம செயற்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்கள் மற்றும் பொருந்துகைகளிற்காக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டிற்கான தண்டப்பணம் ரூபா 48,285 ஆல் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.

(ஏ) நீதிமன்ற தண்டப்பணங்கள் தொடர்பான நிலுவை வருமானம் ரூபா 720,271 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நேரொத்த பட்டியல்களில் காட்டப்பட்ட நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கணக்கீட்டு மீதிகளை ஒப்பீடு செய்யும் போது ரூபா 5,594,891 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பெறவேண்டிய கணக்குகளின் பெறுமதி ரூபா 21,613,186 ஆகக் காணப்பட்ட அதேநேரம் செலுத்த வேண்டிய கணக்குகளின் பெறுமதி ரூபா 18,451,022 ஆகும்.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை.

ரூபா 63,101,076 பெறுமதியான ஐந்து கணக்கு விடயங்களானது தேவையான தகவல்களை சமர்ப்பிக்காமையால் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தவோ / சரிபார்க்கப்படவோ முடிந்திருக்கவில்லை.

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுக்கிடையிலான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 52 ஆம் பிரிவு | 09 அங்கீகரிக்கப்படாத நிர்மாணங்களை இடித்தொழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபை (நிதி நிர்வாகம்) விதிகள் | |
| | (i) விதி 164 | சபையின் கணக்குப் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் நாளாந்த அடிப்படையில் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) விதிகள் 217 மற்றும் 218 | காணிகள் தொடர்பிலான பொருள் மெய்மையாய்வை நடாத்துவதன் தொடர்பிலான பதிவேடொன்று பராமரிப்பக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரசபைச் சட்டம் மற்றும் 2008 சனவரி 25 ஆந் திகதிய 1523/16 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் பகுதி ‘‘இ’’ | 04 தேயிலைத் தொழிற்சாலைகள் மற்றும் 56 வர்த்தக அமைப்புக்களிற்கான சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| | (i) நி.பி 880 ஊவா மாகாண பிரதம செயலாளரின் 2005 மார்ச் 24 ஆந் திகதிய 2/எம்/1 ஆம் இலக்க கடிதம் மற்றும் 1988 இன் பிரதேச சபை (நிதி நிர்வாகம்) விதிகளின் 180 ஆம் விதி | 09 உத்தியோகத்தர்களால் வைப்பிலிட வேண்டிய பிணைகள் அவர்களுடைய பிணைதாரர்களால் வைப்பிலிடப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 110 | நட்டங்கள் மற்றும் சேதங்களிற்கான பதிவேடு பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 384(3) | காசோலை பாதுகாப்பிற்கான பதிவேடு பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப்பிரமாணம் 756 | 2016 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2002 திசெம்பர் 02 இன் ஐஏஐ/2012/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனிகள் மற்றும் உபகரணங்களிற்கான நிலையான பதிவேடு பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,080,555 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,679,636 ஆகவிருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

முன்னைய ஆண்டுகள் தொடர்பாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய நிலுவை வருமானங்கள் ரூபா 1,268,303 தொகையானதுடன் பற்றுச்சீட்டிடப்பட்ட வருமானத்தில் ரூபா 749,915 அல்லது 25 சதவீதமான தொகையானது அத்திகதியிலுள்ளவாறு நிலுவையாகவிருந்தது.

#### 2.2.2 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து அறவிட வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 5,018,688 ஆகவிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனீன்மைகள்

(அ) ரூபா 481,110 கூட்டுத்தொகையான தீர்க்கப்படாத முற்பணங்கள் 2016 திசெம்பர் 31 வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொஸ்லடை ரிகபாத உப அலுவலகத்தில் வருமான சேகரிப்பிற்காக பயன்படுத்தப்பட்ட பெறுகை புத்தகங்களின் அடியிதழ்கள் 2016 திசெம்பர் 31 அளவிலும் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 செயற்பாட்டு செயற்திறமையீன்மைகள்

இரண்டு சந்தர்ப்பங்களில் இயந்திரத்திலிருந்து அகற்றப்பட்ட இரு பகுதிகள் எந்த நோக்கத்திற்கும் பயன்படுத்தாமல் களஞ்சியத்தில் விளைவற்றிருந்தது.

**3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்**

2016 ஆம் ஆண்டின் போது ரூபா 6,591,627 ஐ செலவழிப்பதன் மூலம் கொஸ்லன்டவில நிர்மானிக்கப்பட்ட வியாபாரக் கட்டிடத்தொகுதி கட்டிடத்திற்கு மேலதிகமான வீதிகளை நிர்மாணிக்கையில் வியாபார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் கடன் தவணைக்கட்டணங்கள் மற்றும் வட்டியாக சபையின் நிதியத்திடமிருந்து வருடாந்தம் ரூபா 865,247 தொகை ஏற்படுத்த வேண்டியிருந்தது.

**3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

910 ஆம் இலக்கத்துடனான ரூபா 80,237 பெறுமதியான உபகரணமொன்று இடந்தவறி வைக்கப்பட்டது.

**4. கணக்களிப்புப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டு கட்டுப்பாடு**

பாதீடானது நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டின் வினைத்திறனான கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.2 வருடாந்த பெறுகைத் திட்டம்**

மீளாய்வாண்டின் போது வருடாந்த பெறுகைத் திட்டமானது அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.3 உள்ளகக் கணக்காய்வு**

மீளாய்வாண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**(அ) பொருள் மெய்மையாய்வை அளவையை நடாத்துதல்**

2016 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கணனிகளிற்கான பதிவேட்டைப் பேணல்**

2002/ஐஏஐ/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் கணனிகள் மற்றும் உபகரணங்களிற்கான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

**(இ) பண்டிகை பொருட்களினை விநியோகித்தல்**

அரச மானியங்களை பெறுவதற்கு உரித்தில்லாத தரப்பினர்களுக்கு ரூபா 39,000 பெறுமதியான பண்டிகைப் பொருட்கள வழங்கப்பட்டது.

**(ஈ) ரூபா 250,000 பெறுமதியான மூலப்பொருட்களினை விநியோகித்தல்**

‘‘பஹல விஹர்பஹல’’ ஊழியர் வதிவிடத்தை திருத்துவதற்கு ரூபா 250,000 பெறுமதியான கூரைத்தகடுகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அத்தகைய வதிவிடத்தின் உள்ளதன்மையானது பௌதீகப் பரீட்சிப்பில் நிருபீக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) களஞ்சிய முகாமைத்துவம்
(இ) நிர்மாண நிர்வாகம்
(ஈ) கடன்பட்டோர்கள் மற்றும் கடன்கொடுத்தோர்கள் மீதான கட்டுப்பாடு
(உ) நிலையான சொத்துக்கள்